# குழந்தையேசு பிறந்த நன்னாள்
# இறைவன் நம்மை அழைக்கின்றார்



குடிலில் பிறந்தயேசு பிறந்த உடனே ஏழைகளையும், அறிஞர்களையும் தன் பால் ஈர்க்கிறார். தேவ தூதர்களின் ஒலியை இடையர்களே முதலில் கேட்கின்றனர் பெத்லேம் போக வேண்டும் என்ற அழைப்பைக் கேட்கின்றனர். "யார் வந்திருக்கிறார் என்பதனைப் போய் பார்ப்போம்". என்று செல்கின்றனர். அதற்கு பிறகே, மூன்று அரசர்களும் விண் கோள்கள் வழியே வந்த அழைப்பிற்கு இணங்க "யூத அரசருக்கு மரியாதை செய்வோம்" என்று புறப்படுகின்றனர்.

யேசு பிறந்த திருநாளில் கோயில்களிலும், வீடுகளிலும் குடிலில் இடையர்களையும், மூன்று அரசர்களையும் அலங்கரிப்பர். பொதுவாக அவர்கள் மட்டும் இருப்பதில்லை. காலப்போக்கில் சில உருவங்களின் (சிலைகள்) வடிவில் குழந்தைகள், பெரியோர்கள், இளைஞர்கள், முதியோர்கள், திருமணம் ஆகாதோர், திருமணம் ஆனோர், உடல் நலமுள்ளோர், உடல் நலமற்றோர், பாதிக்கப்பட்டோர் என எல்லாம் வந்து சேர்ந்து கொண்டனர். அனைவரும் ஒருவருக்கொருவர் மாறுபட்டோர் எனினும் அனைவரும் "இறைவன் தன் ஒரே மகனை அனுப்பியதற்கு அவரைப் போற்றுவோம்" என்ற அழைப்பைப் பெறுகின்றனர்.

இறைவனின் பெயரைப் போற்றும் **ஆவலில்** ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும், குடிலை வணங்கி வீடு திரும்புவர். இனி அந்த அழைப்புக்கு என்ன விடை என்பதை ஆழமாய், இதய பூர்வமாய், சாதாரண இயல்பான வாழக்கையிலும் தேடத் தொடங்குவர். அதன் பிறகு "இறைவன் மனித வடிவம் எடுத்தார்" என்பதனை ஏற்க, வரவேற்க, சாட்சி சொல்ல தூய ஆவியின் உதவியால், யேசு கிருத்துவின் தெய்வ போதனையைத் துணை கொள்வோம்.

ஒவ்வொரு குடும்பமும், பங்கும் அந்த அழைப்பைக் கேட்க வேண்டுமெனில் குடிலில் இருக்கும் இடையர்களையும், மூன்று அரசர்களையும் தொடர்ந்து செல்ல வேண்டும். குழந்தை யேசு வடிவில் எல்லையற்ற இறையன்பை ஒன்று சேர்ந்து வரவேற்போம். முழு நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனும், அருளுடனும், பேரின்பத்துடனும் அவரின் அன்பினை ஏற்க அவரை வேண்டுவோம். இதற்கு முன்பே, அவரின் அன்பே நாம் வாழ்வதற்கு சாட்சி என்பதனை மறவோம்.

உங்களுக்கும், உங்கள் குடும்பத்தாருக்கும், நம் கிருத்துவ மக்களுக்கும், என் அன்பான யேசு பிறந்த நன்னாள் வாழ்த்துக்கள்.

✝ **PASCAL DELANNOY**
**ÉVÊQUE DE ST. DENIS EN FRANCE**
**NOËL 2019**